| மையம் : | பெயர்: |
|---|---|
| | பதிவு எண்: |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: | நாள் : |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – ஜனவரி–பிப்ரவரி 2021**

**நேரம் : 1.30 மணி** — **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. — Total Marks : 50

**பகுதி – 1**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following text and answer the questions given below in a single line.

**(5x1=5)**

சித்தார்த்தன் ஓர் அந்தணச் சிறுவன். ஒரு சமயம், அவனது ஊர் வழியாகச் சமணத் துறவிகள் யாரோடும் ஒட்டாமல் செல்வதைக் காண்கிறான். அவர்களைக் கண்ட சித்தார்த்தனது மனது சமண மதத்தை நாடுகிறது. சமண மதத்தில் சேரவிரும்புவதைத் தன் தந்தையிடம் தெரிவிக்க வருகிறான். தந்தை அறையில் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். சித்தார்த்தன் அறைக்குள் நுழைகிறான்.

**வினாக்கள் :**

1. சித்தார்த்தன் யார்?

___

2. சித்தார்த்தனின் ஊர் வழியாக போனவர்கள் யார்?

___

3. சித்தார்த்தனின் மனம் எதை நாடியது?

4. சித்தார்த்தன் எதைத் தந்தையிடம் தெரிவிக்க வந்தான்?

5. அறையில் ஆசனத்தில் அமர்ந்திருந்தது யார்?

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line

**(5x1=5)**

வாழை வடக்கு ஈனும், வான் கமுகு தெற்கு ஈனும்;
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடை பாயும்;
கட்டுக் கலம் காணும்; கதிர் உழக்கு நெல் காணும்;
அரிதாள் அறுத்துவர மறுநாள் பயிர் ஆகும்;
அரிதாளின் கீழாக ஐங்கலம் தேன் கூடுகட்டும்;
ஆனைகட்டும் தாளும் வான்மட்டும் போர் ஆகும்;
மாடு கட்டிப் போர் அடித்தால் மாளாது செந்நெல் என்று
ஆனைகட்டிப் போர் அடிக்கும் அழகான தென்மதுரை;

**வினாக்கள்**

1. வாழைமரம் எப்பக்கமாக குலை தள்ளியது?

2. வான் உயரம் வளர்ந்த கமுகு மரங்கள் எந்த திசையை நோக்கிக் குலை தள்ளின?

3. அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு கட்டிலும் எவ்வளவு நெல் கிடைத்தது?

4. ஒரு நெற்கதிரில் எவ்வளவு நெல் கிடைத்தது?

5. தென்மதுரையில் எவ்விலங்கைக் கட்டி போர் அடித்தனர்?

III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.

Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. மலர்மாலை

2. மகிழ்ச்சி

3. இயற்கை

4. நண்பன்

5. மாணவர்கள்

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. இடைக்குலச் சிறுவனுக்கு புத்தபெருமான் கூறிய அறவுரை யாது?
2. எது அறிவு என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
3. 'பாம்பாகும் வாழைப் பழம்' – காளமேகப் புலவர் வழி நின்று விளக்குக.
4. மாணவர்கள் ஏன் அரசியலில் வேண்டும்?
5. விஜயலட்சுமி தன் விருப்பம் என்று எவற்றையெல்லாம் கூறினார்?
6. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற ஔவையின் பாடல் வழி நீ அறிந்த கருத்தை உன் சொந்த அனுபவம் கொண்டு எழுதுக.
7. திருக்குறள் – சிறு குறிப்பு வரைக.
8. ஏனாதிநாதரின் சிறப்புப் பண்புகளைப் பற்றி எழுதுக.
9. 'எட்டாம் வேற்றுமை' – விளக்கி உதாரணம் தருக.
10. பால் என்றால் என்ன? விளக்கி உதாரணம் தருக.

**V. பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**
Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. உன் ஊரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி ஒன்றினைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.
2. நீ என்னவாக ஆக விரும்புகிறாய் என்று உன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. 'கொரோனா வைரஸ்' பரவல் காலத்தில் ஏற்பட்ட ஊரடங்கின் போது நீ செய்த பயனுள்ள செயல்களைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

******